# விடியல்
## The Dawn

இதழ்-78, அக்டோபர்-2015



<u>கௌரவ ஆசிரியர்</u>
முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

<u>ஆசிரியர்</u>
முனைவர். சி. ஆர். சுரேஸ்
துறைத்தலைவர்

<u>இணையாசிரியர்</u>
முனைவர் த. சுந்தரராஜ்

<u>ஆசிரியர் குழு</u>

| | |
|---|---|
| திரு. வீ. முருகானந்தம் | முனைவர் த. கண்ணன் |
| திருமதி ச. சாந்தி | திரு. ப. ராஜேஷ் |
| முனைவர். து. சரஸ்வதி | முனைவர் பா. ராஜேஷ் |
| முனைவர். ந. சங்கீதா | முனைவர். ம. லோகேஸ்வரன் |
| திரு. செ. தங்கராஜ் | திரு. மு. சதீஸ்குமார் |
| முனைவர் முப்பிடாதி | திருமதி. பிரதிபா |



வெளியீடு:

**தமிழ்த்துறை**

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


### <u>தலையங்கம்</u>

## முதுமையைப் போற்றுவோம்

அறியாமை என்னும் நெருப்பில் விழாமல் அனுபவம் என்னும் பாதுகாப்பு கவசம் தருபவர்கள் முதியோர்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்து ஓய்ந்த பிறகு அந்த ஓய்வு நிலையில் ஆதரவைத் தேடுபவர்கள் முதியோர்கள்.

எந்தத் துறையிலும் அனுபவம் என்பது மிகவும் முக்கிய மானது. அந்த அனுபவத்தால் இளைய தலைமுறைக்கு நல்வழிகாட்டுபவர்கள் முதியோர்கள். முதியோர்களைப் பேணுவதும், அவர்களின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் இக்காலகட்டத்தில் மிகவும் குறைந்து வருகிறது. நகரமயமான வாழ்க்கை என்று கூறி இந்த தலைமுறையினர் முதியவர்களை மிகவும் எளிதில் அலட்சியப்படுத்திவிடும் சூழல் மிகவும் வருந்தத் தக்கதாகும்.

இரண்டாம் உலகப்போரினால் பாதிக்கப் பட்டு இருந்த பெரும்பாலான ராணுவ வீரர்கள் முதிய வயதில் பல்வேறுஇன்னல்களுக்கு ஆளாகினர். அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற குரல் ஜெர்மனி யிலிருந்து 1980-களில் ஒலிக்கத் துவங்கியது.

உலகப்போரில் கலந்து கொண்ட ராணுவ வீரர்களின் முதுமையின் பாதுகாப்பிற்காக துவங்கிய இந்தக்குரல் விரைவில் உலகம்

முழுவதிலுமுள்ள முதியவர்களின் நலனை முன்னிறுத்தும் குரலாக எழும்பியது. இதனை அடுத்து டிசம்பர் 14 ஆம் தேதி 1990ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை முதியவர்களைப் பேணுங்கள் என்ற முழக்கத்துடன் முதியவர்களுக்கான நாளை ஒவ்வொரு ஆண்டும் **அக்டோபர் முதலாம் தேதி** கடை பிடிக்கத் துவங்கியது.

முதியவர்களுக்கான வரையறை என்பது உலக அளவில் 60 வயதாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்த வயது நிர்ணயம் பொதுவாக அனைத்து நாடுகளுக்கும் ஒன்றாகவே உள்ளது.

**துயர்துடைக்க ஒருநாள்**

போரால் பாதிக்கப் பட்டவர்கள்,. தங்கள் பிள்ளைகளால் ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டவர்கள், அடைக் கலம்தேடி பிற நாடுகளுக்கு குடிபெயர்ந்த நிலையில் உள்ளவர்கள் மற்றும் மருத்துவ வசதிகள் எதுவும் கிடைக்காமல் உதவிக்கு யாருமின்றி இருக்கும் முதியவர்கள் போன்ற பல்வேறு நிலைகளில் சமூகத்தில் வாழும் முதியவர்களின் துயர் துடைக்க அந்தந்த நாடுகள் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது.

முதியோர் நாளான அக்டோபர் முதலாம் தேதி பல்வேறு பிரச்சாரத் தளங்கள் மூலம் மக்களுக்கு முதியவர்களுக்கு ஆற்றும் சேவைகள் குறித்து விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது. இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் 2014ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 10இல் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவராக இருக்கிறார். இது, 2050ஆம் ஆண்டில் அய்ந்தில் ஒருவராகவும், 2150இல் மூன்றில் ஒருவராகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**நாமும் நாளை முதியோர் ஆவோம்**

முதியோரும், குழந்தையும் மனதால் ஒன்று எனக் கூறுவர். முதிய வயதில் முக்கியமாக ஞாபக மறதி மற்றும் இயலாமை காரணமாக முதியோர்களின் சில நடவடிக் கைகள் பிறருக்கு எரிச்சல் ஊட்டுவதாக இருக்கும். அத்தகைய நேரங்களில் அவர்களிடம் கோபம் காட்டாமல், பரிவுகாட்ட வேண்டும்.



முதியோரை இதுநாள் வரை, கவனிக்க மறந்து விட்டாலும், இந்த நாட்களைப் பயன்படுத்தி அவர்களிடம் அன்பு செலுத்த முன் வரவேண்டும். நாமும் நாளை கட்டாயம் முதியோர் ஆவோம் என்பதை மனதில் நிறுத்துங்கள். முதியோர்கள் ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதவர்கள் அவர்களுக்குத் தேவை அமைதி மற்றும் அரவணைப்பு மட்டுமே. நமக்காக வாழ்ந்த அவர்களின் இறுதிநாட்களில் இவற்றை நாம் கொடுத்து அரவணைப்போம்.

# உள்ளடக்கம்

கவிதை..........................................................................04-10

சிறுகதை..........................................................................10-12

கட்டுரை..........................................................................12-24

பொது அறிவு......................................................24-32

# கவிதைகள்

## வறுமை

எங்கும் வறுமை...
எதிலும் வறுமை...

தங்க இடமின்றித்
தவிக்கும் வறுமை..
தாகத்திற்குக் கூடத்
தண்ணீர் இல்லாமல்
தவிக்கும் வறுமை...!!

பெறுவார்
பேணிக் காப்பார் என்று
பாடிய வள்ளுவன் வாய்மொழியே
தவறாகிவிட்டதே...

வறுமையின் பிடியில்
வாடுபவர், காப்பாற்று...!
ஏன் என்று கேப்பாரற்று...!

வாழ்க்கையில் வறுமை
என்பது ஒரு பாகம்
உண்ண உணவு இல்லை
ஆனால் அதுவே பலரது
வாழ்விற் தீராத சோகம்...!

கருவில்
சுமந்து ஏழைத்தாய் கதறி துடித்து
தான் பெற்றெடுத்த பிள்ளையை
வறுமை எனும் தீய்க்கு
இறையாக்குகிறாள்.

வாழப் பிறந்தவன் வாழ்கிறான்.
ஆளப் பிறந்தவன் ஆள்கிறான்.
ஆனால்...!
ஏழ்மையின் பிடியில் வளர்ந்தவன்
தன் வாழ்க்கையை வாழாமல்
இழக்கிறான்...!!

வறுமையை ஒழிக்க
தன்னம்பிக்கை வேண்டும்.
ஆனால்
எவ்வளவு இருந்தாலும்
தட்டு நிறையாது...

உழைப்பைக் கொண்டு
வறுமையை விரட்டலாம் என்றால்
தன் உழைப்பைத் தாராளமாகப்
பயன்படுத்தி
தடம் மாற்றும் சுயநலவாதிகளின்
எண்ணிக்கைக்கு அளவேயில்லை..!
எனும் போது வருமையை ஒழிக்க
வாய்ப்பே இல்லை....!

அன்றாடத் தேவைகளை
நிறைவேற்ற முடியாமல் தவிக்கும்
ஏழையின் வாயில் கதவில்
அனுமதியின்றி நுழையும்
வறுமையின்
நிறம் கருப்பு...!!
அந்த கருப்புக் கள்வனைக் கொல்ல

ஏழைக்கு தேவையான ஆயுதம் தான் பணம்..!
ஆனால், அந்த ஆயுதத்தைப் பெற அவனது ஆயுட்காலம் போதாது...

ஏழையை விட்டுப் பிரியாது
ஏழையின் ஏழ்மை...
ஏழையின் கனவில் வரும் பனி மாளிகை
காலைக் கதிரவனைக் கண்டால்
காலைந்து போகும்...!

**வி. முகுந்தன்**
**முதலாமாண்டு – வேதியியல் துறை**

## வன்முறையற்ற நாள்

வன்முறை ஈட்டுவது
வெற்றியா? தோல்வியா?
வன்முறையின் பலன்
என்பது யாது?
தெரிந்தால் சொல்லுங்கள்.

வன்முறையில் ஈடுபட
காரணம் என்ன?
பணமா அல்லது
மறவரின் ரணமா?
அப்படித்தான் உள்ளது
ஒருவன்
வன்முறையில் விழுவது.

வன்முறையால் எல்லோருக்கும்
வெற்றியெனில்
இப்புவியில் அமைதியென்பதற்கு
இடம் ஏது?
ஏன் அமைதியால்
சாதித்த தலைவர்களை
இந்திய நாடு
பெற்றெடுக்கவில்லையா?

அமைதியை போதித்தவர்கள்
மறைந்ததோடு
அமைதியும் மறைந்ததா?
இல்லையெனில்
எதற்கு வன்முறை?

வன்முறை என்ற பெயரில்
உயிர்களைக் கொல்லும்
உரிமையை உமக்கு
அளித்தவர் யார்?

உயிர்களை கொன்றால்
நீ வீரனாவாயா?
அல்லது மற்றவரின்
சாபத்திற்கு ஆளாவாயா?

வன்முறையால் கிட்டுவது அழிவு
எத்தனையோ உதாரணங்கள்
நமக்கு முன், இருந்தாலும்
நாம் கண்டு கொள்ளவில்லையே

அன்றுவெள்ளையன் வேற்றுமையை

கண்டதனால் இந்திய
மக்களை அடிமையாக்கினான்.

வன்முறை நம்மிடத்தில் காட்டுவது
ஒற்றுமையா? வேற்றுமையா?
தெரிந்தால் சொல்லுங்கள்

வன்முறையால் விளைவது தீங்கு
அதற்கு வேண்டாம் நமது பங்கு
அதனை ஒழிக்க உன்கையை
ஓங்கு

வன்முறை சமுதாயத்தில்
படிந்துள்ள அழுக்கு
அதனை துடைப்பதே நமது இலக்கு
துடைக்கவில்லையெனில் அது
நமக்கு இழுக்கு

வன்முறையை கைவிடு
வளரும் தலைமுறையை வாளவிடு
சற்றே சிந்திப்போம்
அமைதியைச் சந்திப்போம்.

**பெ. சூரிய பிரகாஷ்**
**முதலாமாண்டு – வேதியியல்**

## ஒரு தாயின் ஏக்கம்

வன விலங்கு
இயற்கையின் பசுமை நீ
வாழ்க்கையின் இனிமை நீ
இறைவன் படைத்த அதிசயம் நீ
உன் காட்டுக்குள் வந்தவர்களை
அன்போடு நடத்துவாய் நீ
அதே சமயத்தில் அவர்களை
வேட்டையாடுவாய் நீ
உன் வீட்டை அழிக்கும் போது
மனிதர்களை பொறுத்துக்
கொள்வாய் நீ
உன்போல் பொறுமை காப்பவர்
மனிதரல்ல.
ஆனால் மனிதரே உன் வீட்டை
அழிக்கிறார்கள்.

**இ.சந்தோஷ்குமார்**
**முதலாமாண்டு – பி.காம் சிஏ**

## வறுமையே வறுமையே

வறுமையே வறுமையே நீ தான்
உலகின் ஆட்சி...!
மக்களின் வாழ்வு தாழ்வு கண்டு
இருந்த காலத்தில் உனது நிலை
செல்வந்தனான சமூகம் கேட்க,
நீ, ஆடம்பரம் அன்னும் ஆடையை
இழந்ததால் சமூகத்தில் வறுமை
என்னும் நிலையை அடைவாய்...!

ஒருநாள் வருமானம் தொல்லை
இல்லை
துக்கம் இல்லை...!
உலகம் எங்களை ஏழ்மையாகப்
பார்க்கிறது, துரத்துகிறது.

ஊனத்தை முதலாகக் கொண்டு
வாழ்கிறோம், போராடுகிறோம்...!
நீண்டநாள் போராட்டத்தை சுமந்து
வாழும்
சுமைகள் மேலும்...!
இரவு பகலாய் பாடுபடும்
உறக்கத்தை
மறந்து வாழ்கிறோம்...!
எங்கு சென்றாலும் மனிதர்கள்
தப்பித்துச் செல்ல வழியேயில்லை...!
அனுமதி எங்கே நிலையான
வாழ்க்கை
எங்கே...?
தேடுகிறோம் வீதியிலே...!
உடுத்த உடை இருந்தும் உடல்
தெரிகிறதே, மனம் வலிக்கிறதே...!
தினமும் சந்திக்கும் யுத்தம்
எங்களின் வாழ்விலே அனுதினமும்...
செவிக்கரத்தை தேடிகிறோம்
தவிக்கிறோம்...
தொடர் வழிப்பாதை எங்களுக்கு
தெரிகிறது எங்கு செல்கிறோம்
எனத் தெரியாமல் நடக்கிறோம்...!

**எம். ரஞ்சித்குமார்**
முதலாமாண்டு – வேதியியல்துறை

## வாட்டும் வறுமை

சமுதாயத்தை இரண்டாய்ப்
பிரிப்பவன்
உன்னுடன் இருப்பவருக்கு
துன்பம் தருவாய்..!
உன்னுடன் இல்லாதவர்க்கு
இன்பம் தருவாய்..!
தீய செயலுக்கு
அடியாய் உள்ளவன்
கடின வேலைக்கும்
சிக்கனத்திற்கும் எதிரி – நீ
குழந்தைத் தொழிலாளிகளை
உற்பத்திக்கு வித்திட்டவன் - நீ
இந்தியாவின் வளர்ச்சியை தடுப்பவன்
- நீ
நீ இல்லையென்றால் இந்தியா
வல்லரசு
நாடாக மாறும்...!
இவர் வேறு யாரும் இல்லை
நம்முடம் இருக்கும் ‘வறுமை’...!

**வா. முனீஸ்குமார்**
**இரண்டாமாண்டு – நுண்ணுயிரியல் துறை**

## உலக வன நாள்

உலகில் வனங்களும் ஓர் அங்கம்
உயிரினங்கள் பலவற்றின்
புகழிடமாம்
உயர்ந்த தருக்களின் வசிப்பிடமாம்
உயிர்வழி நிறைந்தது கானகமாம்!

புறவு பொதும்பு குறுங்காடாம்
அடவி என்பது என்பதும்
வனம்கானம்

அமைதியும் இருளும் குடிகொள்ளும்
அச்சமளிக்கும் அடர்ந்தவனம்!

வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்தும்
மண்ணின் அரிப்பை அது தடுக்கும்
விலங்கினம் பலவற்றின்
இருப்பிடமாம்
மூலிகை வளமும் அதிலடங்குமாம்!

வன வளம் காப்பது நம்கடமை
வனத்தை அழிப்பது மிகமடமை
கானகம் என்பது பொதுவுடமை
அழித்தால் குறையும் மழவளமை...!!
வனங்கள் இல்லேல் வளங்கள் ஏது?
வானம் பெய்யுமா
மழையமுதம் கூறு?
நாட்டுக்கு வனங்கள்
எல்லாம் தனங்கள்
நாமறிந்து காத்த
மாறட்டும் மனங்கள்!
வனங்கள் நிறைந்த நாடே நன்னாடு!
வனத்தை அழித்தால்
நாடும் சுடுகாடே!
உலக வனநாள் இன்று
உயரும் சிந்தனை நன்று!
செயலில் ஆக்கம் காண
செம்மையாய் உழைப்போம் வாழ!
இடம்பொருள் ஏவலென
கவி படைக்கும் தாயே!
வாழ்த்துக்கள்
அருமை.

**மு. உதயகுமார்**
**முதலாமாண்டு – வேதியியல்**

## என் பொன் வசந்தம்

அன்பிற்கு அம்மா
ஆதரவு என்றால் அப்பா
இவை இரண்டும் பெத்த சொந்தம்
ஈகைக்கு நண்பர்கள்
உடன் பிறந்தது சகோதரி
ஊரெல்லாம் உறவுகளாய் இருந்தாலும்
என்றென்றும் நீதானே என் பொன்
வசந்தம்.

**எம் ஜனனி,**
முதலாண்டு உயிர் வேதியியல் துறை

## வறுமை

கணவரை இழந்து கண் கலங்கி
நிற்கும் கண்மணிகள்...!
அம்மாவை இழந்து அனாதையாகும்
குழந்தைகள்...!
கல்வியை இழந்து கடைக்குச்
செல்லும் மாணவர்கள்...!
கற்பை இழந்து கரைக்கு
வரும் மாணவிகள்...!
கணவரையும் அம்மாவையும்
கல்வியையும் கற்பையும்
இழப்பதற்கு காரணமே வறுமை...!

**மு. அருண்குமார்,**
முதலாமாண்டு – வேதியியல் துறை

## தாய்மை

பத்து மாதமும்

சுமையை சுகமாய் காண்பாள்
தாய்!

## என் மனம் தொட்ட தலைவர்

விண்ணில் விண்கலனகளை ஏவி
விளையாடின கைகள்
விண்ணை தொட சென்றது ஏனோ
அனைவரையும் கனவு கானுங்கள்
என்றாய்
இன்று நீயோ கனவாகி போனாய்
கனவாகி போகாதோ உன் நினைவு
ஊரே போற்றும் உன் முடிவு
கடலோரம் கண்ட மாமேதை
அக்கடலே போற்றும்
உன் நினைவை
இதுவரை இருந்தது ஒரு கலாம்
இன்றோ கோடி இளைஞர்களின்
உள்ளத்தில் பல கலாம்
2020 உன் கனவு அதனை
நினைவாக்குவது எங்கள் முடிவு.

**வே. வேங்கையன்**

## சமூக மாற்றங்கள்

ஊரில் உள்ள முதியவரெல்லாம்
காணாமல் போயினரே
முதியோர் இல்லத்தில்
இடப்பற்றாக்குறை
மதுமகனின் தள்ளாட்டம் வீதியிலே
காந்தி ஜெயந்தி கொண்டாட்டம்
காலமெல்லாம் மனிதனின்
நடமாட்டம்
விலங்குகள் ஜாக்கிரதை
மக்கட் பெருக்கத்தால் வீடின்றி
அலையும் சுதேசிகள் நாட்டில் பலர்
மனிதனின் ஜாதகக் கோள்கள்
விண்ணில் பறக்கிறது அதில்
ஏவுகனை
அறப்பணி என்பது போதித்தல்
பணமிருந்தால் போதிக்கும்
தனியார்க்கூடம்
ஓட்டப்பந்தயத்தில் தந்தியை
வீழ்த்தியது மின்னஞ்சல்
தந்திச்சேவை தற்கொலை
உலகெங்கும் மனநோயாளிகளின்
சங்கமம்
நலம் பெறுவோம் நாம்
தரம் குறைந்த மக்களுக்கும்
தரமான பொருளையே
தந்திடுவோம்
இது தரநிர்ணய நாள்
வறுமை ஒழிப்பு போராட்டம்

போராட்டம் செய்பவன் பரமஏழை
ஏழைவீட்டில் உணவுப் பஞ்சம்
மாடிவீட்டுக் குப்பைத்தொட்டியில்
உணவுக்கூட்டம்
உலகெங்கும் ஒற்றுமை காண்போம்
ஐநா சபையின் கீழ்
கெடா மக்களையும்
கெட்த்தூண்டுதே
தகவல் தொடர்பு வளர்ச்சி
நாட்களைக் கொண்டாடும் மக்கட்கு
நற்செயல்களைச் செய்வதில்
நாட்டமில்லை....

அ. சூர்யா
1 B.SC A

## முதியோர்

முதுமை என்பது
இளமையின் முடிவு
முதுமை வயதான
பின்வரும் வடிவு
முதுமை என்பது
இளமையின் இறப்பு
முதுமை ஆவதே
முடிவின் தொடக்கம்
முதியோர் நாளாம் உலகில் இன்று
முதலில் வணங்கு அவரை இன்று
முதுமை அடைவோம்
நாமும் நிச்சயம்
முதியோர் என்பர்
ஒருநாள் நம்மையும்
முதியோர் என்றும்
முன்னோர் நமக்கு
முதலாய கொள்வோம்
மனதில் என்றும்
முன்னோரின் வாழ்வே
பாடம் நமக்கு
முதியோர் வாழ்த்தே
தேவை என்றும்
முதியோரை மதித்து வளர்த்திடு
வாழ்வில் முன்னேறும் பாதை
அறிந்திடும் நமக்கு
முதியோரை என்றும்
முகமலரச் செய்திடு
முள்ளும் மலராகும்
உந்தன் வாழ்வில்
முதியோர் உள்ளம்
மழலையாய் மாறிவிடும்
முகமும் அகமும்
உன்னை வாழ்த்திடும்
முன்னோரை நினைத்து
துவங்கிடு நாளை
முதியோரை வணங்கு
நிறைவோடு வாழு.

**கு.லாவண்யா**
இரண்டாம் ஆண்டு இளங்கலை நுண்ணுயிரியல்

# சிறுகதை

## வேட்டை நாய்

வேட்டைக்காரன் ஒருவன் இரண்டு நாய்கள் வைத்திருந்தான். அவற்றில் ஒரு நாய் அவனுடன் வேட்டைக்குச் சென்றுவரும் மற்றொரு நாய் வீட்டைக் காக்கும் வேட்டைக்காரன்வேட்டைக்குச் சென்று திரும்பியதும், வேட்டையில் கிடைத்தவற்றில் வீட்டு நாய்க்கே அதிகமாக்க் கொடுப்பது வழக்கம் வேட்டை நாய் நீண்ட நாள்வரை அதைப் பொருட்படுத்தாமல் இருந்த்து.

ஒரு நாள் வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்த்தும், வேட்டைக்காரன் வழக்கம்போல் செய்தான். அதை கண்ட வேட்டை நாய்க்கு அப்போதுதான் வருத்தம் ஏற்பட்டது.

வருத்தம் கொண்ட வேட்டை நாய், வீட்டு நாயைப் பார்த்து வேட்டையாடுவது எவ்வளவு கடினமான வேலை தெரியுமா நீ அந்தத் துன்பத்தில் பங்கு கொள்ளவில்லை. ஆனால் நான் வேட்டையில் சம்பாதித்தவற்றில் மட்டும் பெரும் பகுதியை பங்காகப் பெற்றுக் கொள்கிறாய் இது முறையா? இது நியாயமா? உனக்கே இது நல்லதாகத் தெரிகிறதா? என்று வருத்தத்துடன் கேட்டது.

அதைக்கேட்ட வீட்டு நாய் மெல்லச் சிரித்துக் கொண்டே நண்பனே அது என்னுடைய குற்றம் இல்லை.நீ என்மீது வருத்தப்படுவதில் பயனில்லை. இந்தக் குற்றம் நம் எஜமானுடையது. அவர் எனக்கு வேட்டையாட சொல்லித் தரவில்லை. வேட்டையாடுவதில் என்னைப் பழக்கவில்லை. மற்றவர் சம்பாதித்த பொருளில் பங்கு பெறத்தான் சொல்லிக் கொடுத்து பழக்கியிருக்கிறார். என்று பதில் கூறியது.

அதை கேட்டதும் வேட்டை நாயினால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை.இந்த அநியாயக்கார உலகத்தில் நியாயத்தை எதிர்பார்ப்பது தவறு என்பதை உணர்ந்து மௌனமாக இருந்தது.

ச.மஞ்சு
இரண்டாம் ஆண்டு இளங்கலை ஆங்கில இலக்கியம்

# கட்டுரை

## டிஜிட்டல் மொழி

2015 செப்டம்பர் 10 முதல் 12 வரை போபாலில் நடந்த உலக இந்தி மாநாடு இந்தி பேசும் மக்களையும், இந்தி ஆதரவாளர்களையும் உற்சாகமடையச் செய்திருக்கிறது. 39 நாடுகளிலிருந்து வந்திருந்த இந்தி அறிஞர்கள், ஆய்வாளர்கள் முன்னிலையில் மாநாட்டின் தொடக்கமாக பிரதமர் மோடி ஆற்றிய உரையில், "எதிர்காலத்தில் ஆங்கிலம், சீனம் ஆகிய மொழிகளோடு இந்தியும் டிஜிட்டல் உலகில் ஆதிக்கம் செலுத்தும்" என்று கூறியது தான் அதற்குக் காரணம். இந்தியை நாட்டின் ஆட்சிமொழியாக்க சட்ட ரீதியாகவும்,சுய பரப்புரைகளாலும் பா.ஜ.க. மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்று, மோடியின் அக்கருத்தை புறம்தள்ளிவிட முடியாது. மோடியின் இந்திச்சார்பு உலகறிந்ததாக இருந்தாலும், இந்தி மாநாட்டில் அவர் கூறிய இந்தக் கருத்திற்கு சில யதார்த்த உண்மைகளும் அடிப்படை ஆதாரங்களாக இருக்கின்றன. அவற்றுள் மூன்று உண்மைகள் முக்கியமானவை.

முதல் உண்மை, இணையத்தைப் பயன்படுத்தும் இந்தியர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் அபரிமிதமான வளர்ச்சி. இணையப் பயன்பாட்டில் சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் போட்டியாக இந்தியா திகழ்கிறது. சீனா 650 மில்லியன் (43% பேர்), அமெரிக்கா 279 மில்லியன்

(47% பேர்) இணையப் பயன்பாட்டளர்களைக் கொண்டுள்ளன. இந்தியா 305 மில்லியன் (24% பேர்) இணையப் பயன்பாட்டாளரோடு சீனாவிற்கு அடுத்த நிலையில் உள்ளது. இணையத்தைப் பயன்படுத்தும் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக இந்திய மொழிகளில் இணையத்தை பயன்படுத்தும் திட்டத்தை (Indian Language Internet Alliance) கூகுள் தொடங்கியிருக்கிறது. இதன் மூலம் இந்திய இணையப்பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கையை 2017 ஆம் ஆண்டுக்குள் 500 மில்லியனுக்கு உயர்த்த கூகுள் இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் பயனாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு இந்தி ஆப்ஸ்களைத் தான் கூகுள் முதலில் உருவாக்குகிறது.

இரண்டாவது உண்மை, உலகில் அதிகமான மக்கள் பேசும் மொழிகளில் மாண்டரின் (சீனம்), ஆங்கிலத்தை அடுத்து இந்தி (497 மில்லியன் மக்கள்) மூன்றாவது இடத்தை வகிப்பதாக சமீபத்தில் வந்த சர்வே (http://www.worldblaze.in/top-10-most-spoken-languages-in-the-world/).

மூன்றாவது உண்மை, இந்தி மொழியை உலக அளவில் அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கும் இந்தித் திரைப்படங்கள்.

உலகின் பல பகுதிகளில் பரவியிருக்கும் இந்தியர்களுக்கும், இந்தியாவில் வசிக்கும் இந்தியர்களுக்கும் (அவர்கள் இந்தி அல்லாத பிறிதொரு இந்திய மொழியை தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும்) இந்தித்திரைப்படங்கள் மீது ஏற்பட்டிருக்கும் கவர்ச்சி. இது தற்போதைய இந்திய சினிமாவின் அடையாளமாக இந்தித்திரைப்படங்களை இந்தியர்களிடமே முன்னிறுத்திக் கொண்டிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐரோப்பாவும் அமெரிக்காவும் உலக நாடுகளின் மொழி,கலாச்சாரம் முதலியவற்றில் ஆர்வம் செலுத்தத் தொடங்கின. அதன் விளைவாக தம் நாட்டு பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு நிறுவனங்களிலும் தனித்தனி ஆய்வு மையங்களை நிறுவின. இது இன்று உலகம் முழுவதும் பரவலாகியிருக்கிறது. அமெரிக்கா,ஐரோப்பா,மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் தெற்காசிய ஆய்வுகள் மையம் (Centre of South Asian Studies), இந்தியவியல் ஆய்வு நிறுவனம்

(Institute of Indology) என ஆய்வு மையங்களை நிறுவி இந்திய சமூக, பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கிய பின், ஒரு சமூகத்தைப் பிரதிபலிக்கும் அடிப்படை ஆதாரங்களில் வரலாறு,இலக்கியம் முதலியவற்றோடு இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய செல்வாக்குமிக்க காட்சி ஊடகமான சினிமாவும் முக்கிய இடம் பிடித்தது. மொழி, பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றில் இந்தியர்கள் வேறுபட்டிருந்தாலும், ஒட்டுமொத்த இந்திய சமூகத்தின் பிரதிநிதியாக இந்தி சினிமாவையே உலகம் அணுகுகிறது. இது போன்ற காரணிகளும் இந்தி மொழியை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன.

இம்மூன்றும் மோடி, சுஸ்மாசுவராஜ், பா.ஜ.க., ஆர்,எஸ்.எஸ், சங்பரிவார் போன்ற இந்தி ஆதரவாளர்களை உற்சாகமடையச் செய்திருக்கின்றன.

இதற்கு முன்பு நடந்த ஒன்பது உலக இந்தி மாநாடுகளும், உலகத்தமிழ் மாநாடுகள் போல் இலக்கியம், மொழி அமைப்பு குறித்தே விவாதிப்பதாகக் கழிந்திருக்கின்றன.மோடியின் ஆட்சியில் நடந்த இந்த பத்தாவது உலக இந்தி மாநாடு தான் மொழி அரசியலை கையிலெடுத்து இந்தியைக் கொண்டாடும் மாநாடாக முடிந்தது. மத்திய அரசின் ஆதரவோடு இந்த மாநாட்டை அமர்க்களப்படுத்தியவர் வெளியுறவுத்துறை அமைச்சரும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவருமான சுஸ்மா சுவராஜ்.

**த. சுந்தரராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

## வறுமை

- ❖உலக வருமை ஒழிப்பு நாள் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 17-ஆம் தேதி சர்வதேச ரீதியில் கடைபிடிக்கப்படுகிறது. உலக வக்கியின் தரவுகளின் படி 1.4 பில்லியன் மக்கள் மிகவும் வறுமைக் கோட்டின் மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்றனர்.
- ❖இவர்களின் நாள் வருமானம் 1.25 டாலர் ஆகும். சர்வதேச ரீதியில்

வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வறுமை காரணமாக மரணமடைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும், பசிக் கொடுமையில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை 1992 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்பு தினத்தை உத்தியோகப் பூர்வமாக அறிவித்தது.

❖"வறுமைக்கு எதிரான குழந்தைக்கு மற்றும் குடும்பங்களின் வேண்டுகோள்" 2009 – ஆம் ஆண்டின் சர்வதேச வறுமை ஒழிப்பு நாளின் தலைப்பாகும்.

❖இந்நாள் முதன் முதலாக 1987-ஆம் ஆண்டு பிரான்சின் பாரிஸ் நகரில் கடைபிடிக்கப்பட்டது. பசி, வறுமை, வன்முறை, பயம் என்பவற்றில் பலியானோரைக் கௌரவிக்கும் வகையில் சுமார் பத்தாயிரம் மக்கள் 'டொர்கேட்ரோ' வின் மனித உரிமைகள் மற்றும் விடுதலைச் சதுக்கத்தில் ஒன்று கூடினர். இவர்கள் உலகளாவிய ரீதியில் வறுமை நிலை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தனர்.

❖வருமை நிலை காரணமாக உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதுதன் அவசியம் குறித்து அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கைத் தரத்துக்குக் கீழ் வாழும் மக்களை ஏழ்மை நிலையில் அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என வரைவிலக்கணம்ப்படுத்தலாம். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே வறுமை நிலை அளவு சார்ந்து மதிப்பிடப்படுகிறது. தீவிர வறுமை நிலை என்பது நாலொன்றுக்கு 1.25 டாலர்களுக்கும் குறைவான தொகையில் ஒருவர் வாழ்க்கை நடத்துவது என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

❖இது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். பொதுவாக வறுமை நிலை உனவு, சுத்தமான நீர், உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், சமூக வாய்ப்புகள், மனித அரசியல் உரிமைகள், பிற சமூகங்களுடன் தொடர்புகளற்ற அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலையைக் குறிக்கின்றது.

❖உலகளாவிய ரீதியில் வறுமை சடுதியாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வாஷிங்டனில் நடைபெற்ற நிதி மற்றும் வளர்ச்சித் துறை மாநாட்டில்(2009) எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் மேலும் பல நாடுகள் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள அதே வேளை, வறிய நாடுகளுக்கான உதவிகளைச் செல்வந்த நாடுகள் தொடர்ந்தும் வழங்க வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

❖உலக வங்கியின் 185 உறுப்பு நாடுகளினதும் அமைச்சர்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் கலந்து கொண்ட நிதி மற்றும் வளர்ச்சித் துறை மாநாட்டில் நிதி நெருக்கடி நீண்ட காலத்திற்கு நீடிக்கும் பட்சத்தில் உலக வங்கிக்கான வளங்களை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖2015- ஆம் ஆண்டுக்குள் வருமையை ஒழிப்பதற்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐ.நா. வின் இலக்குகளை இந்நிதி நெருக்கடி தடம்புரளச் செய்து விடுமெனவும் இதில் கலந்துகொண்ட அமைச்சர்கள் எச்சரிக்கை விடுத்தமை இங்கு அவதானிக்கத்தக்க செய்தியாகும்.

❖மனிதப் பேரழிவைத் தடுப்பதற்கு நாம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள வேண்டுமென வலியுறுத்தியுள்ள உலக வங்கியின் தலைவர்(2009) ரொபேர்ட் ஷோலிக் ஐ.நா. வின் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளான வறுமை, பட்டினி, கல்வி, சமத்துவம், தொற்றுநோய் மற்றும் சிசு மரணம் போன்றவற்றில் பெரும்பாலனவை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

❖மேலும் பொருளாதார நெருக்கடியால் வறுமையில் வாடும் நாடுகள் தான், ஐயகோ! செல்வத்தை ஏற்றுமதி செய்கின்றன.

❖வருமையும் செல்வ நிறைவும் மனித சமுதாயத்துடன் உடன் பிறந்தவை. பணரும், விறலியும் கொடைவள்ளல்களிடமிருந்து பரிசில்கள் பெறுவதை, அதுவும் அமோகமாகப் பெறுவதை பதிற்றுப்பத்து போன்ற சங்க இலக்கியங்களில் காண்கிறோம். ‘கடும்பசியாலும், தாகம் தனித்து

உண்ணாது கரகரவென கரைந்து சுற்றம் கூட்டும்...' எனப்படும் மரபுக்கிணங்க, ஏழை ஏழைக்கு உதவ விழையும் யதார்த்தத்தையும், மனித சமுதாயத்துடன் உடன் பிறந்ததாக கண்கிறோம். இயல்மொழி வாழ்த்துறையில் ஒழுகு வண்ணத்தில் கூந்தல் விறலியர் என்ற செந்தூக்கு பாடல் ஒன்றை படியுங்கள். படித்தாலே பசி தீரும்! அப்படியெல்லாம் பேசித்தான் இதுவரை ஏழைகளை ஏமாற்றி வந்தோம்.

“உண்மின் கள்ளே! அடுமின் சோறே!
எறிக திற்றி! ஏற்றுமின் புழுக்கே!
வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிப்ப,
இருள் வணர் ஒலிவரும் புரி அவிழ் ஐம்பல்
ஏந்து கோட்டு அல்குல், முகிழ் நகை, மடவரல்,
கூந்தல் விறலியர்! வழங்குக அடுப்பே!
பெற்றது உதவுமின்; தப்பு இன்று பின்னும்
மன் உயிர் அழிய, யாண்டு பல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவு எதிர்கொண்ட
தன் இயல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே!

❖ தமிழனுக்கே உரித்தான இந்தப் பழமை மரபு பின்னணியில் 1987 - இல் பிரான்சின் பாரிஸ் நகரத்தில் 'ஊருக்கிளைத்த பிள்ளையார் கோயிலாண்டிகளை' பொருமைப்படுத்தும் விழாவில் நூறாயிரம் மக்கள் கூடியதையும், 1992 லிருந்து அக்டோபர் 17 ஆவது தினம் உலக வறுமை ஒழிப்புநாள் ஒவ்வொராண்டும் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுவதையும், கூர்ந்து கவனித்தால் புலப்படும் உண்மைகள்:

- மனிதனின் வாழ்க்கை வறுமையில் தான் தொடங்கியது
- பஞ்சமும், பற்றாக் குறையும், வியாதிகளும், கணக்கற்ற உபாதைகளும் அதை அதிகரித்தன.
- குடிநீர், சத்துள்ள உணவு, தலைமேல் கூரை, சுத்தமான சூழல் போன்ற அத்தியாவசியங்கள் ஏழைகளின் உரிமையாக உதட்டளவில் மட்டுமே பேசப்படுகிறது.

- ➢வறுமையினால் அநேகர் அற்ப ஆயுளில் மறைந்து போகின்றனர்.
- ➢வறுமையை ஒழிக்க இயலாது
- ➢அதை கணிசமாகத் தணிக்க இயலும்
- ➢அதற்கு உலக அளவில் கொடையுள்ளம், நிர்வாகம், தன்னார்வம் எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்ட வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து.

**க. ஜனனி**

**முதலாமாண்டு – வேதியியல் துறை**

# ஐக்கிய நாடுகள் நாள்

*ஐக்கிய நாடுகள் நாள் அக்டோபர் 24,1945 நிறுவப்பட்டது. இந்த ஐக்கிய நாடுகள் சபையில் 193 உறுப்பினர்களை கொண்டு உள்ளது. 1945 ஜுன் 26 ஆம் ஆண்டு கையெழுத்து உலக அரங்கில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்தல் அனைத்து நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல், பொதுச்சபை பாதுகாப்பு மன்றம் பொருளாதார மற்றும் சமூக மன்றம், செயலகம் தர்மகர்த்தா அவை பன்னாட்டு நீதிமன்றம். இது ஒரு நிரந்தரமான அமைப்பு ஆகும். இது அனைத்து நடவடிக்கைகளை கலந்தாய்வு செய்து தனது பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் உடையது.*

*உலக சுகாதார நிறுவனம்*

*ஐ. நா கல்வி, அறிவியல், பன்னாட்டு அமைப்பு*

*ஐ.நா குழந்தை அவசர கால நீதி நிறுவனம்*

*உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்*

*உலக வங்கி*

*இளம் நீல நிற பின்னனியை கொண்ட வெள்ளை நிற ஐ.நா சின்னம் இரண்டு அலிவ் கிளைகள் மேலேயும் அவற்றின் இடையே உலக வரைபடங்களையும் கொண்டு ஐ.நா கொடி திகழ்கிறது.*

*1995 ஆம் ஆண்டு ஐக்கிய நாடு சபை உலக சமுதாயத்திற்கான தனது சேவையின் 50 வது ஆண்டு பொன் விழா கொண்டாடியது ஐக்கிய நாடு சபையின் மக்கள் நாம் நல்ல தொரு உலகிற்கு ஒன்று கூடுவோம்.*

**ச.தினேஷ்**

## உலக வறுமை நாள்

உலக வறுமை ஒழிப்புநாள் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 17-ஆம் நாள் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. உலகளாவிய ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி பசிப்பிணியில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு 1992-ஆம் ஆண்டுன் வறுமை ஒழிப்பு நாளை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது.

உலகில் வறுமை நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து அனைத்துத் தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்பு தினத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நாள் 1987-ஆம் ஆண்டு முதன் முதலாக பிரான்சின் பாரிஸ் நகரில் கடைபிடிக்கப்பட்டது. பசி, வறுமை, வன்முறை போன்றவற்றில் பழியானோரைக் கௌரவிக்கும் பொருட்டு 100,000 மக்கள் டொர்கேட்ரோவின் மனித உரிமைகள் மற்றும் விடுதலை சதுக்கத்தில் ஒன்று கூடினர்.

### வறுமை நிலை

ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கைத் தரத்துக் கீழ் வாழும் மக்களை ஏழ்மை நிலையில் அல்லது ஏழ்மை நிலைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் எனலாம். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே ஏழ்மை நிலை அளவு சார்ந்து மதிபிடப்படுகின்றது. இருப்பினும் ஏழ்மை நிலை அளவு சார்ந்து மதிபிடப்படுகின்றது. இருப்பினும்

ஏழ்மை நிலை உணவு, சுத்தமான நீர், உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், சமூக வாய்ப்புகள் மனித அரசியல் உரிமைகள் பிற சமூகங்களுடன் தொடர்பற்ற அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலையைக் குறிக்கின்றது.

ஏழ்மை நிலையை அல்லது தீவிர ஏழ்மை நிலை என்றும் ஏழ்மை நிலை என்றும் அதன் வீச்சை வேறுபடுத்திக் காட்டுவர்.

ஏழ்மை நிலையை ஒரு மக்கள் தொகையின் விழுக்காடாகக் குறிக்கலாம்.

**ஏழ்மை**

வறுமை எனப்து உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்பு பெறுதல் போன்றவை உட்பட்ட, வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்த நிலை ஆகும். பல நாடுகளில் முக்கியமாக வளர்ந்து வரும் நாடுகளில் வறுமை ஒழிப்பு என்பது ஒரு முக்கிய இலக்காக இருந்து வருகிறது. வறுமைக்கான காரணம் அதன் விளைவுகள் அதனை அளப்பதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பான வாதங்கள், வறுமை ஒழிப்பினைத் திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதனால் இவை அனைத்துலக வளர்ச்சி, பொது நிர்வாகம் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன. வறுமையினால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை கரணமாக, வறுமை விரும்பத்தக்காத ஒன்றாகவே கொள்ளப்படுகிறது. சமயங்களும் பிற அறநெறிக் கொள்கைகளும் வறுமையை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

**வருமையின் வகைகள்**

வறுமையை முற்றிலும் வறுமை ஒப்பீட்டு வறுமை என்றும் இருவகைப்படுத்தலாம். முற்றிலும் வறுமை என்பது ஒரு குடும்பத்தின் வருமானம் அக்கடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத அளவில் மிகக் குறைவாக இருப்பதாகும்.

ஒப்பீட்டு வறுமை என்பது இரண்டு பிரிவினரின் வாழ்க்கைத் தரத்திற்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பதாகும். இந்தியா போன்ற

நாடுகளில் இவ்விரண்டு வகை வறுமையும் காணப்படுகிறது. அமெரிக்க போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒப்பிட்டு வறுமை மட்டும் காணப்படுகிறது. இதற்குக் காரணம் தேசிய வருமானம் பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகள்.

**உணவு**

உணவு என்பது வாழும் உயிரினங்களால் உட்கொள்ளும் திடமான, நீர்மப் பொருட்களைக் குறிக்கும். உயிரினங்கள் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களையும் வேலை செய்வதற்குத் தேவையான ஆற்றலையும் உணவிலிருந்தே பெறுகின்றன. இவை பொதுவாக விலங்கு அல்லது தாவர மூலத்தில் இருந்தே பெறப்படுகின்றன.

மக்களை பசிக் கொடுமையிலிருந்து வெளிக்கொண்டுவர வளர்முக நாடுகள் மேற்கொண்டுவரும் முயற்சிகள் தொடர்பில் அக்ஸன் எய்ட் நிறுவனம் 2009 இறுதிப்பகுதியில் வெளியிட்டுள்ள ஓர் ஆய்வறிக்கையில் இந்தியாவைக் கடுமையாக விமர்சித்திருந்தது. ஆனால் அந்த அறிக்கை பிரேசிலையும் சீனாவையும் பாராட்டியிருக்கிறது.

உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்திய அமைந்திருந்தாலும், தொண்ணூறுகளின் மையப் பகுதியிலிருந்து நாட்டில் போஷாக்கின்மையால் வாடுவோரின் எண்ணிக்கை 3 கோடியாய் அதிகரித்துள்ளது என்று அகஷன் எயிட் நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

அதே சமயம் நிலச்சீர்திருத்தச் சட்டத்தையும், ஏழைகளுக்கு நவு வழக்கும் திட்டத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் பிரேசிலை அந்த ஆய்வறிக்கை பாரட்டியுள்ளது.

சீனா தனது விவசாயத்திற்கு உதவித் திட்டங்களை அறிவித்து 5 கோடியே 80 இலட்சம் பேரைப் பசிக்கொடுமையில் இருந்து வெளிக்கொணர்ந்துள்ளதாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமையை ஒழிக்கும் நமது பணி மனித உரிமைகள் மற்றும் மானுட மரியாதை ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று ஐநா பொதுச் செயலர் பான்கி முன் தெரிவித்தார். 2015 ஆம் ஆண்டுகள் வறுமையை ஒழிப்பதாகன் ஐ.நா இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால் ஏழை நாடுகள் பல இத்திட்டத்தில் மிகவும் பின் தங்கியுள்ளதாக அவர் தெரிவித்த

கருத்தை இவ்விடத்தில் மீட்டுப்பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

**எஸ். காமாட்சி**

முதலாமாண்டு – வேதியியல்

# ஐக்கிய நாடுகள்

ஐக்கிய நாடுகள் சபை என்ற பன்னாட்டு நிறுவனம் 1945 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது 1941 அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த எப்.டி.ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் அட்லாண்டிக் பெருங்கடலில் ஒரு போர்க்கப்பலில் சந்தித்து அட்லாண்டிக் சாசனத்தை முடிவு செய்தனர். அதன் சரத்துக்கள் பல்வேறு மாநாடுகளில் விவாதிக்கப்பட்டன. இறுதியில் 1945 ஆம் ஆண்டு சான்பிரான்ஸிஸ்கோவில் விவாதிக்கப்பட்டு 1945 ஜூன் 26 ல் கையெழுத்திடப்பட்டது. இதன்படி ஐ.நா சபை அக்டோபர் 24, 1945 இல் நிறுவப்பட்ட்து. ஐ.நா சபை தற்சமயம் 193 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதன் தலைமையகம் நியூயார்க் நகரில் அமைந்துள்ளது.

ஐ.நா சபையின் அங்கங்கள்

ஐ.நா சபை ஆறு முக்கிய அங்கங்களை கொண்டுள்ளது.

பொதுச் சபை, பாதுகாப்பு மன்றம், பொருளாதார ம சமூக மன்றம், தர்மகர்த்தா அவை, பன்னாட்டு நீதிமன்றம், செயலகம் ஆகும்.

ஐ.நா வின் முக்கிய நோக்கங்கள்

உலக அரங்கில் அமைதி ம பாதுகாப்பை நிலைநாட்டுதல்

அனைத்து நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்

நாடுகளுக்கிடையேயான சிக்கலை அமைதியான முறையில் தீர்த்தல்

மேற்கூறிய நோக்கங்களை அனைத்தையும் எல்லா நாடுகளிலும் செயல்படுத்துவதற்கான ஒரு மையமாகத் திகழ்வது.

ஐ.நா அவையின் சிறப்பு நிறுவனங்கள்

உலக சுகாதார நிறுவனம்

ஐ.நா. கல்வி, அறிவியல் ம பண்பாட்டு அமைப்பு

ஐ.நா. குழந்தைகள் அவசரகால நிதி நிறுவனம்

பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம்

உணவு ம வேளாண்மை நிறுவனம்

உலக வங்கி

ஐ.நா அவையின் சாதனைகள்

இஸ்ரேல் ம பாலஸ்தீனம் ஈரான் ம ஈராக் சிக்கல்களை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. ஆபிகானிஸ்தானில் இருந்த இரஷ்யப்படைகளை வெளியேறும் படியும் செய்தது.

1963 ஆம் ஆண்டு அணு சோதனை தடைச்சட்ட்த்தையும் 1996 ஆம் ஆண்டு தொடர் அணு சோதனை தடைச் சட்டத்தையும் நிறைவேறச் செய்தது.

1992 ல் ரியோ-டி ஜெனிரோவில் ஐ.நா வின் சுற்றுச்சூழல் ம மேம்பாட்டு மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் அறிக்கை 21 என்ற கோட்பாட்டினை அனைத்து நாடுகளும் ஏற்று இயற்கைச் சூழலை பாதுகாத்து பொருளாதார மேம்பாடடைய உறுதி பூண்டன.

ஐ.நா வின் பெண்கள் மேம்பாட்டு நிதி, பன்னாட்டு ஆய்வு ம பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிர்சி நிறுவனங்கள் மூலம் 100 நாடுகளில் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் ஊக்குவித்தன.

இதோடு மட்டுமல்லாமல் கொரிய வியட்நாம் போர்களையும் முடிவுக்குக் கொண்டு வந்தது.

1995 ஆம் ஆண்டு ஐ.நா சபை உலக சமுதாயத்திற்கான தனது சேவையில்50 வது ஆண்டு பொன்விழாவை கொண்டாடியது. இந்த விழாவின் கருத்தாக ஐ.நா. சபையின் மக்களாகிய நாம் நல்லதொரு உலகிற்காக ஒன்று கூடுவோம் என்று பொதுச்சபையில் அக்டோபர் 1993 ல் எடுத்துரைக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஐ.நா. சபை செயல்படுவதற்கு ஐ.நா. வின் 50 ஆண்டு கால நிகழ்வுகள் பற்றி படித்த மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்க விண்வெளி வீரர்கள் அட்லாண்டிஸ் என்ற விண்கலம் மூலம் சென்று விண்வெளியில் ஐ.நா. கொடியை பறக்கவிட்டு

உலக அமைதிக்காக பாடுபட்ட ஐ.நா. வின் ஐம்பதாண்டு சேவைகளுக்கு வணக்கம் செலுத்தினர்.

மு.வெங்கடேஷ்
இளங்கலை வேதியியல் முதலாம் ஆண்டு




## பொது அறிவு

# இந்த மாதத்தின் முக்கிய தினங்கள்

➲அக்டோபர் – 1

➲**உலக முதியோர் தினம்** (International Day of Older Persons) மருத்துவ வசதி மற்றும் கல்வி அறிவால் மனிதனின் சராசரி ஆயுள்காலம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் உலகளவில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. முதியோர்களின் அதிகரிப்பால் ஏற்படும் சவால்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு பல திட்டங்களை உருவாக்க வேண்டியுள்ளது. முதியோர்களின்மீது கவனம் செலுத்த உலக முதியோர் தினம் 1991ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகிறது.

➲**உலக சைவ தினம்** (World Vegetarian Day) தாவரங்களில் இருந்து பெறப்படும் உணவுப் பொருட்களை சைவ உணவு என்கிறோம். வட அமெரிக்கன் சைவக் கழகம் 1977ஆம் ஆண்டில் இத்தினத்தை அறிவித்தது. இதனை 1978ஆம் ஆண்டில் சர்வதேச சைவ ஒன்றியம் அங்கீகரித்தது. மகிழ்ச்சி, கருணை மற்றும் சைவ வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் – 2

➲**சர்வதேச அகிம்சை தினம்** (International Non-Violence Day) காந்தியடிகள் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னுமிடத்தில் 1869ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் பிறந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இவர் சத்தியம், அகிம்சை என்னும் இரண்டு கொள்கைகளைக் கடைப்பிடித்தார். காந்தியின் அகிம்சை தத்துவம்

இன்றைக்கும் பொருந்தும் என ஐ.நா. சபை அறிவித்தது. அதன் அடிப்படையில் காந்தி பிறந்த தினத்தை சர்வதேச அகிம்சை தினமாக 2007இல் அறிவித்தது.

➲அக்டோபர் முதல் திங்கள்

➲**உலக குடியிருப்பு தினம்** (World Habit Day) மக்கள் நகரங்களில் குடியேறுவதால் வாழ்விட பிரச்சினை ஏற்படுகிறது. இதன்மீது தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக ஐ.நா. பொதுச்சபை 1985ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தது. இதன்படி அக்டோபர் மாதம் முதல் திங்கட்கிழமை உலக குடியிருப்பு தினமாக அறிவித்தது. நகரத்தை விரிவுபடுத்துவது மட்டுமல்லாமல், நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இதன் நோக்கமாகும்.

➲**உலக கட்டிடக்கலை தினம்** (World Architecture Day) கட்டிடக்கலை என்பது கட்டிடங்கள் வடிவமைப்புச் செய்வதற்கான கலையும், அறிவியலும் ஆகும். கட்டிடக் கலையானது கணிதம், அறிவியல், கலை, தொழில் நுட்பம், சமூக அறிவியல், அரசியல், வரலாறு, தத்துவம் போன்றவற்றுடன் தொடர்புடைய ஒரு பல்துறைக்களமாகும். சர்வதேச கட்டிடக் கலையினர் ஒன்றியம் 2005ஆம் ஆண்டில் உலக கட்டிடக்கலை தினத்தை அறிவித்து கொண்டாடி வருகிறது.

➲அக்டோபர் – 3

➲**சர்வதேச போராட்ட தினம்** (International Day of Action) போராடிப் பெற்ற உரிமைகளைப் பாதுகாத்திடவும், அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு, சம உரிமைகள் பெற்றிடவும், தொழிலாளர்கள் போராட வேண்டியுள்ளது. இதனை கருத்தில்கொண்டு உலகத் தொழிற் சங்க சம்மேளனம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 3ஆம் நாளை சர்வதேச போராட்ட தினமாக அனுசரிக்குமாறு உழைப்பாளிகளுக்கு அறைகூவல் விடுத்துள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲அக்டோபர் – 4

➲**உலக வனவிலங்குகள் தினம்** (World Animal Day) உலக வனவிலங்குகள் தினம் முதன்முதலாக இங்கிலாந்து நாட்டில் 2003ஆம் ஆண்டு அக்டோபர் 4 இல் கொண்டாடப்பட்டது. காட்டு விலங்குகளை அழியாமல் பாதுகாக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

வனவிலங்குகளை பாதுகாக்க வேண்டும் என்கிற உறுதிமொழியை மக்களை எடுக்கச் செய்ய வேண்டும். அதன் மூலம் அழியும் தருவாயில் உள்ள விலங்குகளை பாதுகாக்கலாம்.

➲அக்டோபர் – 5

➲**உலக ஆசிரியர்கள் தினம்** (World Teacher's Day) ஒரு சிறந்த சமூகத்தை திறமையான ஆசிரியரால் உருவாக்க முடியும். உலகம் முழுவதும் உள்ள ஆசிரியர்களுக்காக சர்வதேச ஆசிரியர் கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க யுனெஸ்கோ 1994ஆம் ஆண்டில் அக்டோபர் 5 ஐ உலக ஆசிரியர் தினமாக அறிவித்தது. ஒரு நல்ல சமூகத்தை படைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் முதல் வெள்ளி

➲**உலகப் புன்னகை தினம்** (World Smile Day) புன்னகை என்பது மனிதனோடு கூடப்பிறந்த ஒரு உணர்வின் வெளிப்பாடு. ஆரோக்கியமான மனிதனிடமிருந்து வெளிப்படும். இது மனிதனை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவுகிறது. ஹார்வே பால் (Harvey Ball) என்பவர் 1963இல் புன்னகை முகம் என்பதை அறிமுகம் செய்தார். இதனைத் தொடர்ந்து உலகப் புன்னகை தினம் 1999ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. பின்னர் இது ஆண்டுதோறும் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் – 9

➲**உலக அஞ்சல் தினம்** (World Post Day) உலகத் தபால் யூனியன் என்பது 1874ஆம் ஆண்டு அக்டோபர் 9 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் உலகம் முழுவதும் தபால் போக்குவரத்திற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. உலகத் தபால் யூனியனின் மாநாடு 1969ஆம் ஆண்டு டோக்கியாவில் நடைபெற்றது. இதில் உலக அஞ்சல் தினத்தை அக்டோபர் 9 அன்று கொண்டாடுவது என மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

➲அக்டோபர் – 10

➲**உலக மனநல தினம்** (World Mental Health Day) இந்தியாவில் 15 சதவீதம் பேர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இந்திய மன நல மருத்துவக்கழகம் தெரிவிக்கிறது. மனிதனின் மன ஆரோக்கியம்

மற்றும் உலக நல்லெண்ணத்திற்காகவே உலக மனநல தினம் கொண்டாடப்படுகிறது. மனநலத்தில் ஏற்படும் பாதிப்புகளை மக்களிடம் விளக்குதல், முறையாக மருத்துவ ஆலோசனை எடுத்துக்கொள்ள வேண்டும் போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தவே இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் – 2 ஆவது புதன்

➲**சர்வதேச இயற்கைப் பேரழிவு குறைப்பு தினம்** (International Day for Natural Disaster Reduction) புயல், வெள்ளம், பூகம்பம், எரிமலை, சுனாமி, காட்டுத்தீ, கனமழை, சூறாவளி போன்றவையும் பேரழிவுகளை ஏற்படுத்துகின்றன. இயற்கைப் பேரழிவுகளைத் தடுத்தல், குறைத்தல் மற்றும் இவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதல் போன்றவற்றின்மீது கவனம் செலுத்தவே இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இத்தினம் ஐ.நா. சபையின் மூலம் 1989ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

➲அக்டோபர் – 11

➲**சர்வதேச பெண் குழந்தைகள் தினம்** (International Day of the Girl Child) பெண் குழந்தைகள் உலகம் முழுவதும் பாலின பாகுபாட்டால், சமத்துவமற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். கல்வி, மருத்துவம், சட்ட உரிமை ஆகியவை மறுக்கப்படுகிறது. அது தவிர குழந்தை திருமணம், வன்கொடுமை போன்றவற்றால் பெண் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பெண் குழந்தைகளுக்கு சமத்துவம் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்த அக்டோபர் 11 ஐ சர்வதேச குழந்தைகள் தினமாக ஐ.நா. சபை 2011இல் அறிவித்தது.

➲அக்டோபர் 2ஆவது வியாழன்

➲**உலகக் கண்பார்வை தினம்** (World Sight Day) உலகளவில் சுமார் 37 மில்லியன் மக்கள் கண்பார்வையின்றி வாழ்கின்றனர். மேலும் சுமார் 124 மில்லியன் மக்கள் குறைந்த பார்வையுடனே வாழ்கின்றனர். குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ பற்றாக்குறையினால் பார்வைக் கோளாறு ஏற்படுகிறது. குறிப்பாக 75 சதவீதமான பார்வைக்குறைபாடுகளை சரிசெய்து விட முடியும். கண் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் – 12

➲**உலக ஆர்த்ரைடிஸ் தினம்** (World ArthritisDay) ஆர்த்ரைடிஸ் எனப்படுவது மூட்டு வலியாகும். இது ஆண், பெண், குழந்தைகள், சிறு வயதினர் என எல்லா தரப்பினரையும் தாக்கும் நோய். முன்னோர்களிடமிருந்து பரம்பரை நோயாகவும் பரவும். தீல்வாத நோயால் வரும் பெரும்பாலான ஆர்தரைடிஸ்கள் உடலின் பெரும்பாலான பகுதிகளைத் தாக்குகிறது. இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲அக்டோபர் – 14

➲**உலகத்தர நிர்ணய தினம்** (World Standards Day) உற்பத்தி செய்யும் பொருட்கள் சர்வதேச அளவில் தரமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக 1946ஆம் ஆண்டு, அக்டோபர் 14 இல் சர்வதேச தர நிர்ணய அமைப்பு (ISO) உருவாக்கப்பட்டது. உலகத் தர நிர்ணய தினம் 1970ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகிறது. நுகர்வோர்க்கு தரமான பொருட்களை வழங்க வேண்டும். தரமான பொருட்களே உலகைக் காக்கும் என தர நிர்ணய அமைப்பு கூறுகிறது.

➲**உடல் உறுப்புகள் தானம் மற்றும் சிகிச்சை தினம்** (World Day for Organ Donation and Transplantation) நாம் இறந்த பிறகும் ஒருவரை வாழவைப்பது என்பது உடல் உறுப்புகளை தானம் செய்வதன்மூலம் நடக்கிறது. ஒருவர் இருபதிற்கும் மேற்பட்ட உறுப்புகளை தானமாக வழங்கலாம். இறந்த பிறகு யாருக்கும் பயன்படாது போகின்ற உறுப்புகளை தானம் செய்வதன்மூலம் பலரை வாழ வைக்கலாம். உடல் உறுப்புதானத்தை வலியுறுத்தி 2005ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் – 15

➲**உலக வெண்மைத்தடி தினம்** (World White Lame Day) பிரிஸ்டல் நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் பிக்ஸ் என்பவர் 1921ஆம் ஆண்டில் ஒரு விபத்தின்போது தனது பார்வையை இழந்தார். இவர் சாலையை கடக்கும்போது தனது கையில் வெள்ளைத் தடியைப் பயன்படுத்தினார். வெண்மைத்தடி பயன்படுத்தும் முறை என்பது 1931ஆம் ஆண்டிலிருந்து உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்தது. 1964ஆம் ஆண்டில் உலக வெண்மைத்தடி தினம் அறிவிக்கப்பட்டது.

➲**சர்வதேச கிராமப்புற பெண்கள் தினம்** (International Day of Rural Women) விவசாயத்

துறையின் முதுகெலும்பாக விளங்குபவர்கள் கிராமப்புற பெண்களாவர். உலகின் வளர்ச்சிக்கு, கிராமப்புற பெண்களின் பங்களிப்பை மறக்க முடியாது. இவர்கள் கிராம வளர்ச்சிக்கும், உணவு பாதுகாப்பிற்கும், வறுமையை ஒழிப்பதற்கும் பாடுபடுகின்றனர். அதுதவிர நோய்வாய்ப்பட்ட முதியவர்கள் மற்றும் குழந்தைகளையும் பாதுகாக்கின்றனர். ஐ.நா.சபையானது 2008ஆம் ஆண்டிலிருந்து இத்தினத்தைக் கொண்டாடுகிறது.

- **உலக கைகழுவும் தினம்** (Global Handwash Day) முதன்முதலாக உலக கைகழுவும் தினம் 2008ஆம் ஆண்டு அக்டோபர் 15 அன்று கொண்டாடப்பட்டது. நம்மையும் அறியாமல் கைகளில் அசுத்தங்கள் இருக்கின்றன. இதில் பல்வேறு நோய்க்கிருமிகள் இருக்கின்றன. கைகளை நன்றாக கழுவாமல் சாப்பிடுவதால் வயிற்றுப்போக்கு, ஜலதோசம், வாந்தி, மயக்கம், குடல்புண் போன்ற பல நோய்கள் ஏற்படும். ஆகவே கைகளை சோப்பு போட்டு 30 வினாடியாவது கழுவ வேண்டும்.
- அக்டோபர் – 16
- **உலக உணவு தினம்** (World Food Day) உணவு மற்றும் nhண்மை அமைப்பு 1945ஆம் ஆண்டு அக்டோபர் 16 அன்று ஆரம்பிக்கப்பட்டது. உணவுப் பிரச்சினை, பசி, வறுமைக்கு எதிராக போராடுவதே இந்த அமைப்பின் குறிக்கோளாகும். உணவு இருந்தும் அது கிடைக்காமல் பலர் இறப்பதைக் கண்டு ஐ.நா. சபை வேதனையடைந்தது. மக்கள் அனைவருக்கும் உணவு கிடைக்கச் செய்ய வேண்டும் என்கிற நோக்கில் 1980இல் இத்தினத்தை அறிவித்தது.
- அக்டோபர் – 17
- **உலக வறுமை ஒழிப்பு தினம்** (World Poverty Eradication Day) உலகின் மிகப்பெரிய 3 பணக்காரர்களின் ஆண்டு வருமானத்தைவிட 46 ஏழை நாடுகளின் வருமானம் குறைவாகவே இருக்கிறது. உலகில் வாழும் மக்களில் பாதி பேர் ஒரு நாளைக்கு 2 டாலருக்குக் குறைவான பணத்தில் தான் உயிர் வாழ்கின்றனர். தினமும் வறுமையின் காரணமாக 30,000 குழந்தைகள் இறந்துவிடுவதாக யூனிசெஃப் கூறுகிறது. இந்த வறுமையினை ஒழிக்க அக்டோபர் 17இல் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲அக்டோபர் – 18

➲**உலக வேசெக்டொமி தினம்** (World Vasectomy Day) ஆண்களுக்கும் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்ய முடியும். இந்த அறுவைச் சிகிச்சையை வேசெக்டொமி என்கின்றனர். இதற்கு குழாய் அறுப்பு என்று பொருள். உலகளவில் அளவான குடும்பங்களை ஏற்படுத்த ஆண்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யலாம் என்கிற விழிப்புணர்வை ஏற்படுத்த அக்டோபர் 18ஐ உலக வேசெக்டொமி தினமாக 2013இல் அறிவிக்கப்பட்டுள்ளது.

➲அக்டோபர் – 20

➲**உலக எலும்புப்புரை தினம்** (World Osteoporosis Day) மாதவிடாய் நிற்றலுக்குப் பிறகு எலும்புப்புரை நோய் பெண்களுக்கு அதிகமாக ஏற்படுகிறது. எலும்புப்புரை என்பது அதிகமாக எலும்பு முறிவு ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு எலும்பு சம்பந்தப்பட்ட நோய். உலக எலும்புப்புரை அமைப்பு 1996ஆம் ஆண்டில் அக்டோபர் 20 ஐ உலக எலும்புப்புரை தினமாக அறிவித்தது. உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டு இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲**உலகப் புள்ளியியல் தினம்** (World Statistics Day) ஏழை, எளிய மக்களுக்காக அரசால் வரையறுக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் புள்ளிவிவரங்களைச் சார்ந்தே உள்ளன. பல்வேறு அரசுத்துறைகளிலும், பல்வேறு வகையான இடைநிலைப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபை அக்டோபர் 20ஆம் தேதியை உலகப்புள்ளியியல் தினமாக 2010ஆம் ஆண்டில் அறிவித்தது. புள்ளிவிபரங்களின் வெற்றி மற்றும் சேவையைக் கொண்டாடுவதே இத்தினத்தின் நோக்கம்.

➲அக்டோபர் 2ஆம் வெள்ளி

➲**உலக முட்டை தினம்** (World Egg Day) உலக முட்டை தினம் 1996ஆம் ஆண்டிலிருந்து அக்டோபர் இரண்டாவது வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிறது. ஒரு மனிதனின் ஆரோக்கிய வாழ்வுக்கு ஆண்டிற்கு சராசரியாக 180 முட்டைகள் சாப்பிட வேண்டும். முட்டை கலப்படம் செய்ய முடியாத உணவாக விளங்குகிறது. முட்டை நுகர்வின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் – 21

➲**உலக அயோடின் தினம்** (Global Iodine Day) ஆண்டுதோறும் உலக அயோடின் தினம் அக்டோபர் 21ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. அயோடின் பற்றாக்குறை குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது. அயோடின் சத்துக் குறைபாட்டால் இனம் வயதினரின் அறிவுத்திறன் பாதிக்கப்படும். பெரியவர்க்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படும். எனவே தினமும் அயோடின் கலந்த உப்பினைப் பயன்படுத்த வேண்டும்.

➲அக்டோபர் – 24

➲**ஐக்கிய நாடுகள் தினம்** (United Nations Day) ஐக்கிய நாடுகள் சபை 1945ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பிற்கான சர்வதேச நீதிமன்றம், சட்டதிட்டங்கள் ஆகியன அக்டோபர் 24 அன்று அமுலுக்கு கொண்டுவரப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையே உலகின் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் இது ஒரு அரசு அல்ல. இந்தச் சபை எந்தப் பொருள் பற்றியும் விவாதம் செய்யவும், ஆராயவும், உலகின் சமாதானம், பாதுகாப்பு மற்றும் நடவடிக்கை எடுக்கும் உரிமையையும் கொண்டுள்ளது.

➲**உலக தகவல் வளர்ச்சி தினம்** (World Development Inforamtion Day) உலகளவில் முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதனை உலக தகவல் வளர்ச்சியில் தீர்க்க வேண்டும் என ஐ.நா.சபை முடிவு செய்தது. 1972ஆம் ஆண்டில் உலக தகவல் வளர்ச்சி தினமாக அக்டோபர் 24ஐ ஐ.நா. சபை அறிவித்தது. 1973ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் கொண்டாடப்படுகிறது. தகவல்களைப் பெருமளவில் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என ஐ.நா. சபை கூறுகிறது.

➲அக்டோபர் 4ஆவது திங்கள்

➲**சர்வதேசப் பள்ளி நூலக தினம்** (International School Library Day) அமெரிக்காவைச் சேர்ந்த பிளான்ச் உல்ஸ் (Blanche Wools) என்கிற பெண்மணி சர்வதேச அளவில், பள்ளி நூலகங்களுக்கான ஒரு அமைப்பை 1999ஆம் ஆண்டில் உருவாக்கினார். இவரின் முயற்சியால் முதன்முதலாக 1999ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் திங்கட்கிழமை சர்வதேசப் பள்ளி நூலக தினம் கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்குக் கல்வி

கொடுக்க வேண்டும் என்கிற நோக்கில்தான் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲அக்டோபர் – 27

➲**உலக ஆடியோ பாரம்பரிய தினம்** (World Day for Audiovisual Heritage) யுனெஸ்கோ அமைப்பானது இத்தினத்தை 2005ஆம் ஆண்டில் அங்கீகரித்தது. ஆடியோ ஆவணங்களை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினம் கொண்டாடுவதன் நோக்கம். தேசிய திரைப்பட ஆவணக் காப்பகம், ஆடியோ சங்கங்கள், தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு இடையே கூட்டு முயற்சி ஏற்படுத்த இத்தினம் முதன்முதலாக 2007இல் கொண்டாடப்பட்டது.

➲அக்டோபர் – 31

➲**உலக சிக்கன தினம்** (World Thrift Day) பணத்தை சேமித்து வைக்க வங்கி, தபால் துறை, சிறுசேமிப்பு அலுவலகம், இன்சூரன்ஸ் போன்றவை இருக்கின்றன. அரசு நிறுவனங்கள் நியாயமான வட்டியை வழங்குவதோடு, உங்கள் பணத்திற்கு பாதுகாப்பை கொடுக்கிறது. அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு தனியார் கம்பெனிகளில் ஏமாந்த கதைகள் ஏராளம் உண்டு. முறையான பாதுகாப்பு வழியில் பணத்தை சேமிக்க இத்தினம் வலியுறுத்துகிறது.